# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302

## பரலோகம்

**முன்னுரை :**

"பரலோகம் என்பது எழுத்தின்படியே அமைந்த ஒரு இடம்" என்ற சத்திய போதனை ஒரு கட்டுக்கதை அல்ல. இது ஒரு மனிதனால் திரித்துக் கூறப்பட்ட மாயையான அல்லது கனவில் தோன்றிய ஒரு கற்பனையுமல்ல;இது ஒரு மூடநம்பிக்கையுமல்ல. ஆதிகாலம் முதல் வழங்கி வரும் கதையோ அல்லது மத நம்பிக்கையோ அல்ல. மேலும் பரலோகம் என்பது ஓர் ஆவிக்குரிய அனுபவமோ அல்லது உலகத்தில் நாம் அனுபவிக்கும் ஒரு இடமோ அல்ல. மாறாக பரலோகம் என்பது உண்மையான கிரியைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் உண்மையான மனிதர்களால் நிரம்பப்பட்ட ஒரு மெய்யான ஸ்தலம் ஆகும். அவ்விடமே பிதாவாகிய தேவன் வாசம்செய்யும் இடம் (யோவான் 14:2), குமாரனாகிய தேவன் நமக்காகப் பரிந்து பேசக்கூடிய இடம் ( 1 யோவான் 2:1), மற்றும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்திடும் அனைவரும் போய்ச்சேரும் இடமுமாகும் (பிலிப்பியர் 3:20). இந்த மகத்தான சத்தியத்தைக் குறித்ததான இந்தப் பாடமானது உங்களது உள்ளங்களை மகிமையான எதிர்பார்ப்பினால் நிறைப்பதாக!

### இப்பாடத்தின் முக்கியத்துவம் :

"நீ வாழும் தற்போதைய இந்த வாழ்க்கையே உனக்காக நீ நிர்மாணிக்கும் சொர்க்கம்" என்று சாதாரண மனிதன் கூறுகிறான். பொதுவாக உலக மதங்களை பின்பற்றுவதால் உள்ள பிரதிபலனாக, முடிவில் ஒரு நித்திய சந்தோஷம் உண்டு என்று அம்மத நம்பிக்கைகள் போதிக்கின்றன. ஆனால் அவைகளில் ஒன்றுகூட பரலோகம் என்ற திட்டவட்டமான இடம் உண்டு என்பதையோ, மறுபடியும் பிறந்த, மறுரூபமாக்கப்பட்ட, இவ்வுலகிலிருந்து உயிருடன் மாற்றப்பட்ட விசுவாசிகள் ஆகியோர் நித்தியமாக கிறிஸ்துவுடன் வாசம் செய்து நித்திய நித்தியமாய் தேவனை ஆராதித்து, துதித்துக்கொண்டிருக்கும் வாசஸ்தலமே பரலோகம் என்பதைப் போதிப்பதில்லை. பரலோகத்தின் முக்கியத்துவமே அது ஒரு மெய்யான ஸ்தலம் என்பதாகும். மற்ற மதங்களின் வீணான, வெறுமையான நம்பிக்கைகளுக்கு மாறாக பரலோகம் என்பது ஒரு மெய்யான வாசஸ்தலம் என்பதாலேயே, பரலோகம் பற்றிய இந்த உபதேசம் மிகவும் முக்கியமானதாக உள்ளது. மேலும் ஒவ்வொரு விசுவாசியினுடைய நம்பிக்கையின் நிறைவேறுதலே 'பரலோக சிலாக்கியம்' என்பதால் இது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைப்பது பரிதாபம் (1 கொரி. 15:19). மேலும் ஒரு விசுவாசியின் வாழ்க்கை இக்காலத்துப் பிரயாசங்களின் மத்தியில் பரலோகத்தையே இலக்காகக் கொண்டுள்ளது (பிலிப்பியர் 3:14). ஒவ்வொரு விசுவாசியும் தனது சுதந்தரத்தைச் சுதந்தரித்துக் கொள்ளபோகும் இடமாகவும் பரலோகம் உள்ளது (1 பேதுரு 1:5).

**பாடம்**

## I. பரலோகம் எவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது?

**அ. வேதாகமத்தில் மூன்று வானங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது :**

1. ஆதியாகமம் 1:7,8 வசனங்களில், தேவனாகிய கர்த்தர், பூமியில் இருந்த ஜலத்திற்கும், பூமிக்கு மேலாக இருந்த ஜலத்திற்கும் இடையில் ஆகாய விரிவை உண்டுபண்ணினார் என்றும், அந்த ஆகாயவிரிவுக்கு "வானம்" என்று பேரிட்டார் என்றும் வாசிக்கிறோம். இந்த வானத்தையே பொதுவாக முதலாம் வானம் என்று அழைக்கிறார்கள்.
2. ஆதியாகமம் 1:14–18 வசனங்களில் ". . . வானம் என்கிற வானவெளியிலே தேவன் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களை பூமிக்கு ஒளி கொடுக்கும் வகையில் உண்டாக்கினார்" என்று வாசிக்கிறோம். இதுவே இரண்டாம் வானம் எனப்படும்.
3. 2 கொரிந்தியர் 12:2–ல், தான் மூன்றாம் வானம் வரை எடுத்துக்கொள்ளப்பட்டதாக அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். இங்கே மூன்றாம் வானம் என்று பவுல் குறிப்பிடுவது மத்தேயு 6:9–ன்படி, நட்சத்திரங்களுக்கு மேலே உள்ள தேவன் வாசம் செய்யும் ஸ்தலத்தையே குறிப்பிடுகிறார்.

அப்படியானால் இந்த பரலோகம் என்பது அண்டவெளியில்தான் (Outer space) அமைந்துள்ளதா? ஆம், பரலோகம் என்பது நட்சத்திரங்களுக்கு மேலாக உள்ள அண்டவெளியில்தான் அமைந்துள்ளது. அது மூன்றாம் வானம் என்று சொல்லப்பட்டுள்ளதால், தேவனுடைய வாசஸ்தலமாகிய பரலோகம் நட்சத்திரங்களுக்கு மேலாக அண்டவெளியில்தான் அமைந்துள்ளது.

**ஆ. பரலோகமானது வடதிசையில் அமைந்துள்ளது என வேதாகமம் போதிக்கின்றது :**

1. ஏசாயா 14:13–ல், பிரதான தூதனாயிருந்து தனது பெருமையின் நிமித்தம் சாத்தானாக மாறிப்போன விழுந்துபோன 'லூசிபர்' என்ற தூதனைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவ்வசனங்களில் "நான் வானத்திற்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன், வடபுறங்களிலுள்ள ஆராதனை கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன். . . உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்று லூசிபர் கூறியதைக் காணலாம். இவ்வசனங்களில் தேவ சிங்காசனம் (பரலோகம்) நட்சத்திரங்களுக்கு மேலாக உள்ளது என்பதும், மேகங்களுக்கு மேலாக உள்ளது என்பதும், வடபுறத்தில் அமைந்துள்ளது என்பதும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.
2. சங்கீதம் 48:2–ல், "வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம்" என்று சொல்லப்பட்டுள்ளது.
3. யோபு 26:7–ல், "அவர் உத்தர மண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து. . ." என்று கூறப்பட்டுள்ளது (உத்தரம்–வடக்கு).

மேற்கூறிய வசனங்கள் மூலம் பரலோகமானது அண்டவெளியில் வடதிசையில் தான் அமைந்துள்ளது என்பது உறுதியாகிறது. இதையே இயேசுவும்கூட "என் பிதாவின் வீடு" என்று கூறியுள்ளார் (யோவான் 14:2). வேதத்தில் எழுதப்பட்டதற்கு மேலாக நாம் யூகிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**இ. பரலோகத்தின் அமைப்பிடம் குறித்து சந்தேகத்திற்கு இடமில்லாமல் இரு வார்த்தைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது:**

1. **அது உயரத்தில் உள்ளது :**
   a. அப்போஸ்தலர். 7:55 – "ஸ்தேவான்பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து தேவனுடைய மகிமையையும் தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு. . ."
   b. அப்போஸ்தலர் 1:11 – "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்?"
   c. 2 இராஜாக்கள் 2:11 – ". . . எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்."
2. **அது மேலே உள்ளது :**
   a. கொலோசெயர் 3:1 – "நீங்கள். . . கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" (Things which are above).
   b. யோவான் 8:23 – "அவர் அவர்களை நோக்கி : நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள். நான் உயர்விலிருந்துண்டானவன்" (I am from above).

   மேற்கூறியவற்றிலிருந்து பரலோமானது உயரத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என அறிய முடிகிறது. எனவே நாம் நமது "மீட்பு சமீபமாயிருப்பதால் நாம் நிமிர்ந்து பார்த்து தலைகளை உயர்த்த வேண்டும்" (லூக்கா 21:28). அதேபோல் கொலோசெயர் 3:1–ன்படி "மேலானவைகளையே நாடித் தேடவேண்டும்."

## II. பரலோகம் என்பது மெய்யான இடம், அது ஜீவன் உள்ளவர்களால் நிறையப்பட்ட, கிரியைகள் நடைபெறும் இடம் என்பதை நிரூபிக்க முடியுமா?

**அ. பரலோகம் என்பது ஒரு ஆயத்தமாக்கப்பட்ட இடம் :**

1. யோவான் 14:2 – "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன்" என்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறார்.
2. எபிரெயர் 11:16 – "அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள். . . அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே."
3. பரலோகமானது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசமுள்ளவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்ட இடமாகும்.

**ஆ. பரலோகமானது பிதாவாகிய தேவன் செயல்படும் இடம் :**

1. பரலோகத்திலிருந்து கொண்டுதான் பிதாவாகிய தேவன் பூமியிலிருந்து நாம் ஏறெடுக்கும் ஜெபங்களைக் கேட்கிறார் (சங்கீதம் 65:2; மத்தேயு 6:9).
2. அங்கிருந்துதான் நமது ஜெபங்களுக்குப் பதில் அனுப்புகிறார் (2 நாளாகமம் 7:14).

3. எல்லா மனிதர்களின் செயல்களையும் காண்கிறார் (சங்கீதம் 14:2; 2 நாளாகமம் 16:9)
4. தேவன் பரலோகத்திலிருந்துதான் தேவபயமற்றவர்கள்மீதும் அநீதி செய்கிறவர்கள்மீதும் தம்முடைய உக்கிரக் கோபத்தை வெளிப்படுத்துகிறார் (ரோமர் 1:18).
5. தேவன் தமது ஆசீர்வாதங்களை பரலோகத்தின் பலகணிகளைத் திறந்து நம் மீது பொழியச்செய்கிறார் (மல்கியா 3:10).

**இ. பரலோகம் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இருக்கும் இடம் (எபேசியர் 6:9; கொலோசெயர்4:1) :**

1. பரலோகத்தில் பிதாவின் வலதுபாரிசத்தில் நின்றுகொண்டிருக்கிறார் அல்லது அமர்ந்திருக்கிறார்.
   a. அப்போஸ்தலர் 7:55, ஸ்தேவான் இயேசுகிறிஸ்துவைப் பிதாவின் வலதுபாரிசத்தில் நிற்கிறவராகக் கண்டான்.
   b. எபிரெயர் 1:3, ''இயேசுகிறிஸ்து நமது பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி உன்னதத்தில் மகத்துவமானவரின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்.''
2. இயேசுகிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்கிறவராக, வக்கீலாக, மத்தியஸ்தராக இருக்கிறார் :
   a. 1 யோவான் 2:1 – ''ஒருவன் பாவஞ்செய்வானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராக (வக்கீலாக) இருக்கிறார்.''
   b. எபிரெயர் 7:25 – ''நமக்காக வேண்டுதல் செய்து. . . நம்மை முற்றுமுடிய இரட்சிக்கிறவராக இருக்கிறார்''
   c. 1 தீமோத்தேயு 2:5 – ''தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர் ஒருவரே.''
3. இயேசுகிறிஸ்து தம்முடைய முந்திய மகிமையோடு பிதாவுடன் இருக்கும் இடம் :
   a. இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து இறங்கிவந்தவர் – யோவான் 6:51
   b. பிதாவினால் அனுப்பப்பட்டவர் – யோவான் 17:18
   c. இப்பொழுது பிதாவினிடத்துக்குப் போயிருக்கிறவர் – யோவான் 20:17
   d. பிதாவினிடத்தில் முன்பு உண்டாயிருந்த மகிமையினாலே மகிமைப்படுத்தப்பட்டவர் – யோவான் 17:5
4. திரும்பவும் பூமிக்கு வருவதற்காகக் காத்துக்கொண்டு பரலோகத்திலிருக்கிறார் :
   a. தமது சபையைச் சேர்த்துக்கொள்ள வருவார் – 1 தெசலோனிக்கேயர் 4:16,17 பிலிப்பியர் 3:20
   b. பூமியை நியாயந்தீர்த்து அதை ஆளுகை செய்ய வருகிறார் – வெளி.19:11

**ஈ. பரலோகத்தில்தான் வேதவசனங்கள் நித்தியமாக பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன :**

1. சங்கீதம் 119:89 – ''கர்த்தாவே உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது.''
2. மத்தேயு 24:35 – ''வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.''

<u>குறிப்பு :</u>

2 பேதுரு 3:10,11 –ன்படி, நாம் காண்கின்ற இந்த வானமும் பூமியும் அழிந்துபோகும், ஆனால் வேதவசனமோ நிலைத்து நிற்கும்.

**உ. பரலோகமே கோடிக்கணக்கான தேவதூதர்கள் வாசம்செய்யும் இடமாக உள்ளது :**

1. மத்தேயு 26:53 – ''நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?''
2. லூக்கா 15:7,10 – ''. . . மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது. . . ''

**ஊ. கர்த்தர் தமது சபையைச்சேர்க்கும்படியாக வரும்வரை மரித்த கிறிஸ்தவர்களின் ஆவியானது சரீர உயிர்த்தெழுதலுக்காக காத்திருக்கும் இடமே பரலோகம் : பிலிப்பியர் 3:20**

1. 2 கொரிந்தியர் 5:1–ன்படி, கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு மரித்த பரிசுத்தவான்கள் ஒரு ஆவிக்குரிய சரீரத்தில் வாசம்செய்கிறார்கள்.

<u>குறிப்பு :</u>

1. மாமிச சரீரமில்லாமல் ஆள் தன்மையுடன் இருக்க இயலும் என்பதற்கு பரிசுத்த ஆவியானவரே ஒரு சான்றாக இருக்கிறார்.
2. 2 கொரிந்தியர் 5:6,8, நாம் இந்த சரீரத்தைவிட்டுப் பிரிந்தவுடன் கர்த்தருடனே இருப்போம்.

3. 1 தெசலோனிக்கேயர் 4:14,16,17–ன்படி, பரலோகத்தில் காத்திருக்கும் நமது ஆவிகள், உயிர்பிக்கப்பட்ட நமது சரீரத்தோடு இணைந்து கிறிஸ்துவுக்கு ஒப்பாக மாற்றப்படுவோம் (1 யோவான் 3:2).
4. அதே வேளையில் பரலோகத்தில் தற்பொழுது தேவனோடு இருக்கின்ற கோடிக்கணக்கான விசுவாசிகள் அசைவற்று சோம்பேறிகளாக இருக்கிறார்கள் என்று நினைப்பது தவறானதாகும்.

## III. பரலோகம் பற்றி பொதுவாக எழுப்பப்படும் வினாக்களுக்கான பதில்கள்:

### அ. பரலோகத்தில் உண்மையாகவே மனிதர்கள் இருப்பார்களா?

ஆம், இருப்பார்கள் என்பதற்கான வேதவசன ஆதாரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

1. வெளி. 21:3 – "இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. . . அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்."
2. மத்தேயு 17:1–3 – இவ்வசனத்தில் மோசேயும், எலியாவும் பரலோகத்திலிருந்து வந்து கிறிஸ்துவுடனே பேசுகிறார்கள். உண்மையான பெயர்கள், உண்மையிலேயே மனிதர்கள் காணப்படுகிறார்கள்.
3. மத்தேயு 8:11 – இவ்வசனத்தில் அநேகர் என்றும், ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு என்றும் சொல்லப்பட்டுள்ளது.
4. வெளி. 19:14 – "பரலோகத்தின் சேனையுடன் கிறிஸ்து வந்து அந்திக்கிறிஸ்துவை அழிப்பார் என்றும், இந்த சேனை பரலோகத்தில் இருந்த பரிசுத்தவான்கள் என்றும் கூறப்பட்டுள்ளது."

### ஆ. பரலோகத்தில் நமக்கு புதிய பெயர் கொடுக்கப்படுமா? அல்லது பூமியிலுள்ள பெயரே வழங்கப்படுமா?

பரலோகத்தில் நமக்கு பூமியில் வழங்கிய பெயரே இருக்கும் என பரிசுத்த வேதாகமம் தெளிவாகப் போதிக்கின்றது.

1. லூக்கா 10:20–ல், இயேசு "உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காக சந்தோஷப்படுங்கள்" என்றார். வேறு புதிய பெயர் அல்ல, அவர்களுடைய அதே நாமங்கள் எழுதப்பட்டுள்ளன.
2. பிலிப்பியர் 4:3–ல், "அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது" என்று கூறப்பட்டுள்ளது. அவர்களுடைய அதே பழைய பெயர்களே.
3. மத்தேயு 17:3–ல் பார்க்கும்போது, மோசே, எலியா என்றே கூறப்பட்டுள்ளது. புதிய பெயர்களல்ல, பழைய பெயர்களே.
4. நம் ஒவ்வொருவருடைய பெயர்களும் தேவனுக்கு நன்றாகத் தெரியும்.

**உதாரணம் :**

a. ஆதியாகமம் 22:11 – தேவன் பரலோகத்திலிருந்து ஆபிரகாமை பெயர் சொல்லி அழைத்தார்.
b. ஆதியாகமம் 21:17 – தேவன் ஆகாரை அவளின் பெயரைச் சொல்லி அழைத்தார்.
c. யாத்திராகமம் 33:17 – தேவன் மோசேயை நோக்கி "உன்னைப் பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன்" என்று சொன்னார்.
d. அப்போஸ்தலர் 9:4 – தேவன் தர்சு பட்டணத்து சவுலை பெயர் சொல்லி "சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?" என்று கேட்டார்.

மேற்கூறிய வசனங்களைத் தவிர வேறு பல வசனங்களையும் தேடிக் கண்டுபிடித்துப் பரலோகமானது உண்மையான ஜனங்களால், தங்களது பூலோகப் பெயர்களை உடையவர்களால் நிறைந்திருக்கின்றது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.

### இ. பரலோகத்தில் நமக்குக் காணக்கூடிய உருவமுடைய சரீரம் இருக்குமா?

1. 1 தெசலோனிக்கேயர் 4:15–17 வசனங்களின்படி, இயேசுவானவர் தமது சபையை பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ள வரும்பொழுது ஆயிரக்கணக்கான பூமியில் உயிரோடு இருக்கும் விசுவாசிகள் மரணத்தை ருசி பார்க்காமல், அப்படியே எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அவர்கள் மரிக்காமல் உயிருடன் சரீரத்தோடு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். 1 கொரிந்தியர் 15:51–ல் "நாம் எல்லாரும் நித்திரையடைவதில்லை" என்று எழுதப்பட்டுள்ளதை கவனிக்க வேண்டும்.
2. சரீரத்திலிருக்கும்பொழுதே கீழ்க்கண்ட ஒரு சிலர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஏனோக்கு (ஆதியாகமம் 5:24). எலியா (2 இராஜாக்கள் 2:11). இயேசுவானவர் (அப்போஸ்தலர் 1:9).

   மரணத்தை ருசிபாராது ஆயிரக்கணக்கானோர் சரீரத்தோடு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதும், ஒரு சிலர் ஏற்கனவே சரீரத்தோடு எடுத்துக் கொள்ளப்பட்டதும் உண்டானால், நிச்சயமாக பரலோகத்தில் நமக்குக் காணக்கூடிய உருவமுடைய சரீரம் இருக்கும் என்பதற்கு எவ்வித சந்தேகமும் கிடையாது.

**ஈ. பரலோகத்தில் நமது சரீரம் எப்படிப்பட்டதாக இருக்கும்?**

1. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒப்பாக இருக்கும்.

   a. 1 யோவான் 3:2, ''அவருக்கு (இயேசுகிறிஸ்துவிற்கு) ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.''

   b. பிலிப்பியர் 3:21, ''நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.''

   c. 1 கொரிந்தியர் 15:52,''மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.''

மேற்கூறிய வசனங்கள் மூலம் முற்றிலும் புதுமையான ரூபத்தை அல்ல. மறுரூபமாக்கப்பட்டு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பான சரீரத்தோடு இருப்போம்.

2. எத்தன்மையான சரீரம் இருக்கும்?

   a. அது எலும்பும், மாம்சமும் உள்ள சரீரமாக இருக்கும். ''. . . நீங்கள் காண்கிறபடி எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே . . .'' (லூக்கா 24:39) என்று உயிர்த்தெழுந்த கிறிஸ்து தமது சீஷர்களிடம் கூறினார்.

   b. அது இரத்தம் இல்லாத சரீரமாக இருக்கும்.

   1 கொரிந்தியர் 15:50–ல், ''மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டாது'' என்று சொல்லப்பட்டுள்ளது. ஏனெனில், லேவியராகமம் 17:11–ல் ''மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது'' என்று சொல்லப்பட்டுள்ளது. எனவேதான் பலிபீடத்தின்மேல் பாவநிவர்த்திக்காக இரத்தம் சிந்தப்பட்டது. கிறிஸ்துவும் நமக்காக சிலுவையில் மரித்த பொழுது அவருடைய இரத்தமானது கல்வாரி என்ற பலிபீடத்தின்மேல் நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரமாக சிந்தப்பட்டது. அவர் உயிரோடு எழுந்தபொழுது அவரது சரீரத்தில் ஆணிகள் அறைந்த தழும்புகள் காணப்பட்டன. ஆனால் இரத்தம் காணப்படவில்லை (லூக்கா 24:39). பூமியில் நாம் வாழ்வதற்கு நமது சரீரத்தில் இரத்தம் இருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஆனால் பரலோகத்தில் நித்தியமாக வாழ்வதற்கு, ஆதிமுதற்கொண்டு கிறிஸ்துவில் நிறைந்திருக்கின்ற அந்த நித்தியஜீவனே போதுமானதாக உள்ளது. யோவான் 1:4; 5:26 வசனங்களைப் பார்க்கவும்.

3. இது எவ்வாறு சம்பவிக்கும்?

   பிலிப்பியர் 3:20,21–ன்படி, அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

<u>**குறிப்பு :**</u>

ஏனெனில் கொலோசெயர் 1:16–ன்படி, கிறிஸ்துவே சகலத்தையும் சிருஷ்டித்து அவைகளை ஆண்டுவருகின்றபடியால் சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன. எனவே இயற்கை நியதிகளும் அவருக்குக் கட்டுப்பட்டவைகளே. ஆகவே அவர் தம்முடைய சர்வ வல்லமையினாலே நம்மை மறுரூபமாக்குவார்.

4. பரலோகத்தில் நமக்கு சரீரம் இருக்கும். அது இரத்தமில்லாத மாமிசமும், எலும்பும் உடையதாக, காணக்கூடியதாக, அழியாததாக, கறைபடாததாக, நித்தியமானதாக, மகிமையானதாக இருக்கும் (1 கொரிந்தியர் 15:41–54; பிலிப்பியர் 3:21–ஐ வாசியுங்கள்).

**உ. பரலோகத்தில் நாம் ஒருவரையொருவர் அறிந்திருப்போமா? எந்த உறவு முறையில் அறிந்துகொள்வோம்?**

1. 1 கொரிந்தியர் 13:12, இம்மையில் நாம் ஒருவரையொருவர் அறிந்திருக்கின்றபடியே மறுமையிலும் நாம் ஒருவரை ஒருவர் அறிந்திருப்போம். ஏனெனில் நம்முடைய உறவையும், பெயரையும் ஏற்கனவே ஆண்டவர் அறிந்திருக்கிறார். மேலும் நமக்கு முன்னதாகவே பரலோகம் போயிருக்கிறவர்களை இப்பொழுது எப்படி அறிந்திருக்கிறோமோ அதே விதமாக அறிவோம்.
2. மத்தேயு 8:11 – நாம் மறுமையில் ஆபிரகாம். ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு உட்காருவோம். இவர்களை நாம் அறிந்திருப்போம்.
3. மத்தேயு 17:1–4 – மறுரூபமலையில் பேதுரு மோசேயையும், எலியாவையும் பார்த்தவுடன் அறிந்துகொண்டதுபோல நாமும் இம்மையில் நமக்கு அறிமுகமானவர்களை மட்டுமல்ல, இதுவரைக் கண்டிராத பரிசுத்தவான்களையும் பரலோகத்தில் அறிந்துகொள்வோம்.
4. அப்போஸ்தலர் 1:11–ல், சொல்லப்பட்டபடி, ''இந்த இயேசுவானவர். . . அப்படியே மறுபடியும் வருவார்.'' அதாவது இந்த இயேசுவானவர் வருவார் என்பது எப்படி உண்மையோ அப்படியே அதே ஏனோக்கு, அதே எலியா, அதே

மோசேதான் அங்கு காணப்படுவார்கள். நாம் நமது பெயரை வைத்திருப்பவர்களாக மட்டுமல்ல நம்முடைய தனித்தன்மையையும் உடையவர்களாயிருப்போம். ஒரே ஒரு வித்தியாசம் மட்டுமே காணப்படும். அதாவது பிலிப்பியர் 3:21–ன்படி, நமது சரீரமானது கிறிஸ்துவின் மகிமையான சரீரத்திற்கு ஒப்பான மகிமையான சரீரமாக இருக்கும். பூமியில் பிறந்தவர்களில் ஒரேமாதிரி ஒத்திருக்கக்கூடிய இருவர் கிடையாது. தேவனுடைய பார்வையில் நாம் ஒவ்வொருவரும் தனித்தன்மையுடையவர்களாக காணப்படுகிறோம்.

5. பரலோகத்தில், பூமிக்குரிய உறவுமுறை கிடையாது. நாம் அனைவரும் தேவதூதர்களைப்போல் (மத்தேயு 22:30) கிறிஸ்துவோடு நித்தியமாய் ஜீவிக்கின்ற அவரது ஊழியக்காரராக இருப்போம். குடும்ப உறவுமுறைகள், பாலின வேறுபாடுகள் இம்மையில் நாம் வாழ்வதற்கான தேவனால் கொடுக்கப்பட்ட ஒழுங்குமுறைகள் ஆகும் (ஆதியாகமம் 1:27,28; 2:22–25 பார்க்கவும்). எனவே பரலோகத்தில் நாம் ஒருவரையொருவர் அறிந்திருந்தாலும், நமது உறவு முறை ‘‘தேவதூதர்களைப்’’ போன்றதாகவே இருக்கும். நாம் தேவனுடைய குமாரரும், ஊழியக்காரருமாக இருப்போம்.

**ஊ. குழந்தைகள், சிறுவர்கள் பரலோகம் செல்வார்களா?**

1. கிறிஸ்துவானவர் அகில உலகின் பாவத்திற்காக மரித்தார். அவர் நமது பாவங்களை சுமந்தது மட்டுமல்ல, நமக்காய் பாவமானார் என்று 2 கொரிந்தியர் 5:21–ல் சொல்லப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். எனவே குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் ஜென்ம பாவத்தை இயேசு தாமே சுமந்து விட்டார். எனவே நன்மை, தீமை அறியத்தக்க வயதை அடைந்தவர்கள்தான் தங்களது பாவத்தைக்குறித்து கணக்குக் கொடுக்க வேண்டியுள்ளது. அந்தப் பருவம் அடையாதவர்கள் அதாவது குழந்தைகள் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற கல்வாரி பலியினால் மூடப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

2. மத்தேயு 18:1–14 வசனங்களைக் கவனமாக வாசியுங்கள். இதில் குழந்தைகள் பற்றி கூறப்பட்டுள்ளது.

   வசனல் 3–ல், ‘‘நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால்’’ என்று கிறிஸ்து கூறுகிறார்.

   வசனம் 10–ல், ‘‘ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தேவதூதன் பொறுப்பெடுத்து அவர்களுக்காக தேவ சமூகத்தை தரிசிக்கிறார்கள்.’’

   வசனம் 14–ல், ‘‘குழந்தைகள் கெட்டுப்போவது அல்லது பரலோகம் வரக்கூடாது’’ என்பது தேவசித்தமல்ல என்று கிறிஸ்துவே கூறுவதைக் காணலாம்.

   எனவே மேற்கூறியவற்றிலிருந்து குழந்தைகள் தேவனால் கண்காணிக்கப்பட்டு பரலோகத்துக்குரியவர்களாக பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதை அறியலாம்.

3. 2 சாமுவேல் 12:23–ல், தாவீது செய்த பாவத்தினிமித்தம் பிறந்த குழந்தையைக் குறித்து வாசிக்கின்றோம். அந்தக் குழந்தை இறந்தவுடன் தாவீதிடம் நீங்கள் ஏன் இந்தக் குழந்தைக்காக உபவாசித்து ஜெபிக்கவில்லை? என்று கேட்டபொழுது அவர் பின்கண்டவாறு கூறுகிறார், ‘‘அது மரித்திருக்கிற இப்போது நான் உபவாசிக்கவேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பி வரப்பண்ணக்கூடுமோ? நான் அதினிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை’’ என்றான்.

   தாவீது பாவம் செய்தாலும் மனந்திரும்பி, ‘‘தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனானான்.’’ அவனது முழு நம்பிக்கையும் தேவன்பேரில் இருந்தது. அவன் பரலோகம் செல்வதையே எதிர்நோக்கி இருந்தான். எனவே நான் அதினிடத்துக்குப் போவேன், பரலோகத்தில் அந்தக் குழந்தையைக் காண்பேன் என்ற விசுவாசத்தோடு கூறுவதைக் காணலாம்.

## IV. பரலோகம் எப்படிப்பட்டதாயிருக்கும்?

பரலோகமானது ஒப்பற்ற அழகுள்ள இடமாக இருக்கும். நாம் வெளிப்படுத்தல் 21–ம் அதிகாரத்தை வாசித்தால் இது தெளிவாகும். இவ்வதிகாரத்தில் பூமியின் அழிவுக்குப்பின் தோன்றப்போகும் மாநகரமாகிய புதிய எருசலேமைப் பற்றியும், புதிய வானம், புதிய பூமி பற்றியும் கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்வதிகாரத்தில் அவற்றின் அளவுகளும், அதின் மகிமையான அலங்காரத்தைப் பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. (2 பேதுரு 3:10,11; வெளி. 21:1,2 ஆகிய வசனங்களைக் கவனிக்க). இந்த ஸ்தலமே கிறிஸ்துவின்மீது நம்பிக்கை கொண்டிருக்கிறவர்கள் வந்து சேரும் இறுதி வாசஸ்தலமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

பரலோகம் அநேக வாசஸ்தலங்கள் அடங்கிய இடமாக இருக்கும் (யோவான் 14:1,2). பரலோகத்தில் நமது ஜீவிய போராட்டம் முடித்தவர்களாய் பாரமற்ற ஜீவியம் செய்பவர்களாக இருப்போம்.

பரலோகமானது அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல் அழகுள்ளதாக இருக்கும் (வெளி. 21:2). ஒரு மணவாட்டி தன்னை எவ்வளவு கவனமாக அலங்கரித்துக் கொள்வாளோ, அதேபோல தேவன் நமக்காக பரலோகத்தை மகா கவனமாக அலங்கரித்து ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார்.

பரலோகத்தில் இரவு கிடையாது (வெளி. 21:23). வேதனை, கஷ்டம், தனிமை, துக்கம், பயங்கள் ஆகியவற்றை உண்டாக்கக் கூடிய கொடிய இருள் கிடையாது. தேவனுடைய ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை, எப்பொழுதும் பகலாயிருக்கும்.

பரலோகத்தில் எப்பொழுதும் ஸ்தோத்திர துதிகளுடன் கூடிய சங்கீதங்கள், புதிய பாடல்கள் கேட்டுக் கொண்டேயிருக்கும். தேவனுடைய மகிமையின் பிரகாச ஒளியில் பரிபூரண ஆனந்த சத்தமும், மகிழ்ச்சியும் உண்டாயிருக்கும் (சங்கீதம் 16:11; வெளி. 5:9,10, 22:4, 21:11 பார்க்கவும்).

## V. பரலோகத்தை சுதந்தரிப்பவர்கள் யார்? ஏன்?

### அ. பரலோகத்தை சுதந்தரிப்பவர்கள் யார்?

1. 1 பேதுரு 1:4–ன்படி, "ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும்."
2. ரோமர் 8:17–ன்படி, "விசுவாசத்தினால் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறவர்கள் அவரோடுகூட மகிமையினால் இணைக்கப்படுகிறார்கள்."
3. 1 யோவான் 3:2–ன்படி, "தேவனுடைய பிள்ளைகளாயிருப்பவர்கள் அவரைப்போல் மறுரூபமடைந்து பரலோகத்தை சுதந்தரிப்பார்கள்." எனவே இயேசுவின் இரத்தத்தால் மீட்டுக்கொள்ளப்பட்டு, ஆயத்தமாக்கப்பட்ட ஜனங்கள் சுதந்தரிக்கப்போகும் இடமே தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட அந்தப் பரலோகம் (வெளி. 5:9).

### ஆ. பரலோகத்தை சுதந்தரிக்காதவர்கள் யார்?

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், விக்கிரகாராதனை காரரும், பொய்யர் அனைவரும் பரலோகத்தை சுதந்தரிக்க முடியவே முடியாது என வெளி. 21:8–ல் தெளிவாகச் சொல்லப் பட்டுள்ளது. அவர்கள் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். ஆனால் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என யோவான் 3:18–ல் வாசிக்கிறோம். ஆகவே சுருக்கமாகச் சொன்னால் கிறிஸ்துவை இரட்சகரும், ஆண்டவருமாக ஏற்றுக்கொள்ளாத அனைவரும் பரலோகத்தை சுதந்திரிப்பதில்லை. இயேசுவை தங்களுடைய இரட்சகரும், ஆண்டவருமாக ஏற்றுக்கொண்டவர்கள் அந்த மகிமையான பரலோகம் தங்களுக்காக ஆயத்தப்பட்டிருக்கின்றது என்பதை நினைத்து அகமகிழ்வோமாக!

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்கும் முன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# பரலோகம்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. ஒரு விசுவாசிக்குப் பரலோகம் மிகவும் முக்கியமானதாகும், காரணம் :

   a. ஆவிக்குரிய அனுபவம்

   b. ஒரு விசுவாசி தனது சுதந்தரத்தைப் பெறும் இடமாகும்

   c. தங்கத்தால் ஆனது

2. ''மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டேன்'' என்று பவுல் சொன்னதின் கருத்து :

   a. தேவன் இருக்கும் இடம்

   b. மேகங்கள் இருக்கும் இடம்

   c. சந்தோஷமான நிலை

3. முதலாவது வானம் என்பது எதைக் குறிக்கும் ?

   a. தேவன் வசிக்கும் இடம்

   b. ஆகாய விரிவு

   c. நட்சத்திரங்கள் இருக்கும் இடம்

4. பரலோகம் இருக்கும் திசையைப் பற்றி வேதாகமம் குறிப்பிடுவது என்ன ?

   a. தெற்கு b. கிழக்கு c. வடக்கு

5. பரலோகம் ஆயத்தமாக்கப்பட்ட இடம் என்பதைக் குறிக்கும் வசனத்தை எழுதவும்.

   a. யோவான் 14:2 b. அப்போஸ்தலர் 7:55 c. யோவான் 8:23

6. பரலோகத்திலிருந்து தேவன் விசுவாசிகளுக்கு செய்யும் **மூன்று** காரியங்களைக் குறிக்கவும்.

   a. ஒவ்வொருவரையும் அவர் கவனிக்கிறார்

   b. நமது ஜெபங்களை அவர் கேட்கிறார்

   c. உலகத்தை நியாயம் தீர்க்கிறார்

   d. விசுவாசி மரிப்பதற்காக அவர் காத்திருக்கிறார்

   e. பரலோகத்தின் பலகணிகளைத் திறந்து ஆசீர்வாதங்களை அனுப்புகிறார்

7. பரலோகத்தில் இருக்கும் கிறிஸ்துவைக்குறித்துச் சொல்லும் வசனத்தைக் குறிக்கவும்.

   a. யோவான் 12:2 b. மத்தேயு 6:9 c. எபிரெயர் 1:3

8. கிறிஸ்து பரலோகத்தில் நமக்காகச் செய்யும் பணி என்ன ?

   a. பரிந்து பேசுகிறார்

   b. பாவத்தைத் தடுக்கிறார்

   c. நியாயந்தீர்க்கிறார்

**9.** வேத வசனம் ஒழிந்துபோகாது என்பதைக் குறிக்கும் வசனத்தைக் குறிக்கவும்.

a. மத்தேயு 26:53

b. மத்தேயு 24:35

c. எபிரெயர் 1:3

**10.** சரீரம் இல்லாமல் நபராக இருப்பதற்கு ஒரு நல்ல உதாரணத்தை குறிப்பிடுக.

a. இயேசுகிறிஸ்து

b. அப்போஸ்தலனாகிய பவுல்

c. பரிசுத்த ஆவியானவர்

**11.** உண்மையான மக்களால் பரலோகம் நிரப்பப்படும் என்பதைக் காண்பிக்கும் வசனத்தைக் குறிக்கவும்.

a. மத்தேயு 17:1–3 b. லூக்கா 10:20 c. ஆதியாகமம் 22:11

**12.** பூமியில் நமக்கு இருக்கும் பெயர்களே பரலோகத்தில் இருக்கும் என்பதை அறிந்திருக்கிறோம். காரணம் :

a. மோசேக்கும், எலியாவுக்கும் அதே பெயர்கள் தான் பரலோகத்தில் இருந்தது

b. பூமியில் நமக்குப் பெயர் இருக்கிறது

c. பிலிப்பு இயேசுவைப் பார்த்தபொழுது அவரின் பெயரை அறிந்திருந்தான்

**13.** சபை எடுத்துக் கொள்ளப்படும்பொழுது :

a. ஒரு விசுவாசியின் சரீரம் கிறிஸ்துவின் சரீரத்தைப் போல மறுரூபமாக்கப்படும்

b. ஒரு விசுவாசி நித்தியஜீவனைப் பெற்றுக் கொள்வார்

c. பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசியின் இருதயத்துக்குள் வருவார்

**14.** பரலோகத்தில் நாம் ஒருவரையொருவர் அறிந்திருப்போம் என்பதைக் குறிக்கும் வசனத்தை எழுதவும்.

a. பிலிப்பியர் 3:21

b. 1 கொரிந்தியர் 15:50

c. 1 கொரிந்தியா 13:12

**15.** குழந்தைகள் மரிக்கும்பொழுது பரலோகம் செல்கின்றனர் என்பதை அறிந்திருக்கிறோம், காரணம் :

a. தாவீதின் குழந்தை மரித்தபின், ஒரு நாள் அவனிடம் செல்வேன் என்று தாவீது கூறுகிறார்

b. மூன்றாம் வானத்தில் குழந்தைகளைப் பார்த்ததாகப் பவுல் கூறுகிறார்

c. தாவீதின் குழந்தை மரித்தபொழுது அவரும் பரலோகத்திற்குச் சென்றார்

**16.** பரலோகம் எப்படி இருக்கும் என்பதை விவரிப்பதற்கு **மூன்று** பதில்கள் கொடுக்கவும்.

a. அழகான ஒரு ஸ்தலமாகும்

b. அநேக இளைப்பாறும் ஸ்தலங்கள் அங்கிருக்கும்

c. அங்கே இருளாக இருக்கும்

d. இசை வாத்தியங்களின் இடமாகும்

e. ஒருவரும் பேச முடியாத அமைதியான இடமாகும்

17. 1 பேதுரு 1:4, 1 யோவான் 3:2, வசனங்களின்படி யார் பரலோகத்திற்குப் போக முடியும் ?

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

18. வெளி. 21:8, யோவான் 8:24, வசனங்களின்படி, யார் பரலோகத்திற்குப் போக முடியாது ?

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ______________________________________________________________

**முகவரி :** ______________________________________________________________

______________________________________________________________